




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வியாழன் ❖ ஜூன். 16, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 252 ❖ ரூ.10


### அதிமுகவிற்கு ஒற்றைத் தலைமை கோரிக்கை தீவிரம்

# புகைச்சல்

## தொண்டர்கள் அமைதி காக்க ஓ.பன்னீர்செல்வம் வேண்டுகோள்

**சென்னை**, ஜூன். 16:

அதிமுகவில் ஒற்றைத் தலைமை விவகாரம் மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளநிலையில், தொண்டர்களை அமைதி காக்குமாறு அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம்கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் பதிவில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் அனைவரையும் தயவுசெய்து அமைதி காக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அதிமுகவில் ஒற்றைத் தலைமை விவகாரம் தொடர்பாக, அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தனித்தனியாக ஆலோசனை நடத்தி வந்தனர்.



ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களுடன் நேற்றுமுந்தினம் (செவ்வாய்க்கிழமை) இரவு ஆலோசனை நடத்தினார். இதனைத் தொடர்ந்து 2-வது நாளாக அவர் தனது ஆதரவாளர்களுடன் நேற்றும் (புதன்கிழமை) ஆலோசனை நடத்தினார். இதேபோல் எடப்பாடி பழனிசாமியும் தனது வீட்டில் ஆலோசனை நடத்தினார். இதனால், அதிமுகவில் மீண்டும் ஒற்றைத் தலைமை விவகாரம் சூடுபிடித்துள்ளது.

கடந்த, 2019-ல் நடைபெற வேண்டிய அதிமுக அமைப்பு தேர்தல் கரோனாவால் தள்ளிப்போனது. இதையடுத்து, கடந்த ஆண்டு டிசம்பரில் பதவி வாரியாக தேர்தல் அறிவிக்கப்பட்டு, ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளராக பழனிசாமி மற்றும் படிப்படியாக மாவட்டச் செயலர்கள், நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளுக்கு செயற்குழு, பொதுக்குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெற வேண்டும். பின்னரே, தேர்தல் ஆணையத்தில் அதை சமர்ப்பிக்க முடியும். இதையொட்டி, அதிமுக செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் வரும் 23-ம் தேதி சென்னையில் நடைபெற உள்ளது.

இந்நிலையில், சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி, துணை ஒருங்கிணைப்பாளர்கள் கே.பி.முனுசாமி, ஆர். வைத்திலிங்கம் மற்றும் மாவட்டச் செயலர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

அதிமுகவுக்கு ஒற்றைத் தலைமை வேண்டும் என்று இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட செயலர்கள் வலியுறுத்தியுள்ளனர். இது தொடர்பாக கட்சி நிர்வாகக் குழு முடிவெடுக்கும் என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் உள்ள பயன்பாட்டில் இல்லாத பலமற்றுப் பொன் இனங்கள் பிரித்து எடுக்கப்பட்டு, உருக்கி சுத்த தங்க கட்டிகளாக மாற்றம் செய்யப்பட்டு, பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்பட்ட ரூபாய் 10 கோடி மதிப்பிலான தங்க முதலீட்டு பத்திரத்தை கோவில் நிர்வாகிகளிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் அமைச்சர் பிகே சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் சந்திரமோகன், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஆர் மாலா, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் குமரகுருபரன், கூடுதல் ஆணையர் கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு சின்னப்பாவிற்கு சன்மார்க்க வழிபாட்டு நீத்தார் நினைவேந்தல்

புதுக்கோட்டை, ஜூன். 16:

பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு சின்னப்பாவிற்கு சன்மார்க்க வழிபாட்டு நீத்தார் நினைவேந்தல் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.



பேக்கரி மஹராஜ் நிறுவனர், வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில துணைத்தலைவர் சீனு சின்னப்பா வயது முதிர்வின் காரணமாக மே 1ஆம் தேதி காலமானார். அவரது உடலானது தஞ்சை சாலையில் உள்ள பெருங்கொண்டான் விடுதியில்உள்ள அவரது தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் அறமனச்செம்மல், சன்மார்க்க சீலர் தெய்வத்திரு சீனு சின்னப்பாவின் சமாதி வழிபாடு, படத்திறப்பு அதனைத் தொடர்ந்து புகழ் அஞ்சலியும் நடைபெற இருக்கின்றது. வெள்ளிக்கிழமை காலை 7.20 மணிக்கு அருள் விளக்கு ஏற்றுதல் நிகழ்ச்சியுடன் தொடங்கும் விழா, அருட்பெருஞ்ஜோதி அகவல் ஓதுதல், உலகுகட்டி ஆளும் சன்மார்க்கக் கொடி உயர்த்துதல், சமாதி வழிபாடு, திருவடிப் புகழ்ச்சி, சிவபுராணம், புகழஞ்சலி, ஜோதி வழிபாடு உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன இந்த நிகழ்வில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு பேக்கரி மஹராஜ் குடும்பத்தார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### நன்றி மறவா புதுக்கோட்டை சார்பில் நினைவேந்தல்

உழைப்புக்கும் நேர்மைக்கும் இலக்கணமாக வாழ்ந்து அனைவரின் நெஞ்சத்திலும் இடம்பிடித்த காலஞ்சென்ற உத்தமர் சீனு சின்னப்பாவிற்கு நன்றி மறவா புதுக்கோட்டை அமைப்பின் சார்பில் நினைவேந்தல் நிகழ்ச்சி ஜூன் 18-ஆம் தேதி நாளை மறுநாள் சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் மாவட்ட வர்த்தக கழக கட்டிடத்தில் நடைபெற இருக்கின்றது.

தமிழக மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் கேஎம் சரீப் தலைமை வகிக்கிறார். கம்பன் கழகத்தின் தலைவர் எஸ். ராமச்சந்திரன், பேக்கரி மஹராஜ் நிர்வாக இயக்குனர் அருண் சின்னப்பா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கலந்துகொண்டு சின்னப்பாவின் படத்தை திறந்து வைத்து நினைவு உரையாற்றுகிறார்.

விழாவில் புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா, கம்பன் கழக செயலாளர் சம்பத்குமார், அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆ.செந்தில், லியாக்கத் அலி, நைனா முகமது, எஸ்.ஏ. சேட், சந்திரசேகரன், முகமது கனி, யூசுப் ராஜா, அஷ்ரப் அலி, அப்துல் கனி,ஏ.ஆர். சுல்தான், இலக்கிய அமைப்புகளின் நிர்வாகிகள், சமூக மற்றும் வர்த்தகர்கள் கவிஞர் தங்கம் மூர்த்தி, சாகுல் ஹமீது, தயானந்த சந்திரசேகர சுவாமிகள், டாக்டர்ஜெயராமன், முகமது சபியுத்தீன், டாக்டர் ராம்தாஸ், பேராசிரியர் விஸ்வநாதன், டாக்டர் சலீம், ராஜாமுகமது, சாகுல் ஹமீது, சாந்தம் சவரிமுத்து, கதிரேசன், சேவியர், இக்பால், ராஜாமுகமது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். இப்ராஹிம் பாபு நன்றி உரையாற்றவுள்ளார்.

## திருநாவலூர் அருகே நானோ யூரியா ட்ரோன் மூலம் தெளிப்பு பற்றிய செயல் விளக்கப் பயிற்சி கூட்டம்

கள்ளக்குறிச்சி ஜூன்.16-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநாவலூர் ஒன்றியம், பா.கிள்ளனூர் கிராமத்தில் இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், நானோ யூரியாவை பயன்படுத்தி ட்ரோன் மூலம் தெளித்தல் செயல் விளக்க பயிற்சி கூட்டம் நடைபெற்றது.

இந்த செயல் விளக்கப் பயிற்சி கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர் தலைமை தாங்கினார். இதில் திருநாவலூர் ஒன்றியத்திற்குட்பட்ட பா. கிள்ளனூர் கிராமத்தில் திரவ வடிவிலான நானோ யூரியாவை ட்ரோன் வாயிலாக தெளிப்பது தொடர்பான செயல் விளக்கப் பயிற்சி விவசாய சங்க



பிரதிநிதிகள் விவசாயிகள் முன்னிலையில் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும், இதில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் பேசுகையில், திரவ வடிவிலான நானோ யூரியாவை பயன்படுத்தி இலை வழியாக தெளிக்கும்போது, இலையில் உள்ள துவாரங்கள் அல்லது பிற திறப்புகளின் மூலம் எளிதில் தாவரங்களுக்குள் ஊடுருவுகிறது.

தாவரங்களின் வளர்ச்சிக்கு தேவையான போது, தழைச்சத்து கிடைக்கச் செய்வதால், பயிர்களின் தழைச்சத்து அதிகரித்து சிறந்த மகசூல் கிடைக்கிறது. இதனால், மண் மற்றும் நீர் மாசடையாமல் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது. 500 மி.லி. நானோ யூரியா திரவம் ஒரு மூட்டை யூரியாவிற்கு இணையான பயனை அளிக்கிறது. 500 மி.லி நானோ யூரியா ரூ.240/-க்கு அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும், தனியார் உர மருந்து கடைகளிலும் கிடைக்கிறது. அனைத்து வகையான பயிர்களுக்கும் இந்த நானோ யூரியாவினை பயன்படுத்தலாம். குறிப்பாக, ட்ரோன் மூலமாக தெளிப்பதால், செலவினம் குறைக்கப்பட்டு கால விரையம் தவிர்க்கப் படுகிறது. பணியாட்களின் பற்றாக்குறை போக்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் நானோ யூரியாவை பயன்படுத்தி பயிர்களின் தழைச்சத்து அதிகரித்து பயன்பெறுமாறு தெரிவித்தார்.




புதுக்கோட்டையில் ஐந்தாவது புத்தகத்திருவிழா நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனை கூட்டம், மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் கவிதா ராமு தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் சரவணன், ரம்யா தேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கருப்பசாமி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மணிவண்ணன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன், அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்க நிர்வாகிகள் உள்ளனர்.

## இந்திய ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்த முடிவு செய்துள்ளதாக மம்தா பானர்ஜி தகவல்

டெல்லி ஜூன்.16-

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்த எதிர்க்கட்சிகள் சார்பில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மம்தா தெரிவித்துள்ளார்.

இந்திய ஜனாதிபதி தேர்தல் ஜூலை 18-ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தல் முடிவுகள் ஜூலை 21-ம் தேதி அறிவிக்கப்படுகிறது. இந்த தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்த முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இதற்காக, எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் மேற்குவங்காள முதலமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி ஈடுபட்டு வருகிறார். அந்த வகையில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக டெல்லியில் மம்தா பானர்ஜி தலைமையில்




16 எதிர்க்கட்சிகளின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த மம்தா பானர்ஜி, ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்த இந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிட சரத் பவாரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அந்த கோரிக்கையை சரத் பவார் மீண்டும் நிராகரித்துவிட்டார். ஆனாலும், பொது வேட்பாளர் யார் என்பது குறித்து தொடர்ந்து ஆலோசனை செய்து முடிவெடுப்போம். இது நல்ல தொடக்கம். பல மாதங்கள் கழித்து நாங்கள் ஆலோசனை நடத்தியுள்ளோம். இதேபோன்ற எதிர்க்கட்சிகளின் ஆலோசனை கூட்டத்தை நாங்கள் மீண்டும் நடத்துவோம்' என்றார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தேவையில்லாதவர்களிடமும் தகுதியில்லாதவர்களிடமும் நாம் யார் என்பதை நிரூபிக்காமல் இருப்பதே சிறந்த புத்திசாலித்தனம்!



தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,835 | Rs.5,234 |

## வரலாற்றில் இன்று



1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

# நார்த்தாமலை ஊராட்சியில் துப்பாக்கி குண்டுக்கு பலியான சிறுவனின் தாயாருக்கு அரசு வேலை



புதுக்கோட்டை ஜூன்.16-

புதுக்கோட்டை மாவட்டம்,நார்த்தாமலை ஊராட்சியில் உள்ள துப்பாக்கி சுடும் பயிற்சித் தளத்திலிருந்துவெளியான குண்டு அடிபட்டு இறந்த சிறுவனின் தாயாருக்கு சத்துணவுத் திட்டத்தில் வேலை வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம்நார்த்தாமலை ஊராட்சிக்கு உட்பட்ட கொத்தமங்கலப் பட்டியைச் சேர்ந்த கலைச்செல்வன் பழனியம்மாள் தம்பதியரின் மகன் புகழேந்தி(11). சிறுவன் கடந்த டிசம்பர் மாதம் 30-ஆம் தேதி நார்த்தாமலையில் உள்ள தனது பாட்டி வீட்டில் இருந்த போது அருகில் பசுமலைப்பட்டியில் உள்ள துப்பாக்கி சுடும் பயிற்சித்தளத்தில் இருந்து வெளியான குண்டு சிறுவன் புகழேந்தியின் தலையில் பாய்ந்தது. படுகாயமடைந்த சிறுவன் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த சிறுவன் சிகிச்சைப் பலனின்றி கடந்த 3.01.2022ல் உயிரிழந்தார்.

பாதிக்கப்பட்ட சிறுவனின் குடும்பத்திற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். மேற்படி துப்பாக்கிசுடும்பயிற்சித் தளத்தை நிரந்தரமாக மூட வேண்டும் என கந்தர்வகோட்டை தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னதுரை அரசுக்கு கோரிக்கை வைத்தார். மாவட்ட அமைச்சர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றார். இதுகுறித்து உயர்நீதிமன்றம் மதுரை கிளையிலும் வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில், மேற்படி துப்பாக்கி சுடும் பயிற்சி தளத்தை நிரந்தரமாக மூடுவதற்கு நீதிமன்றத்தில் அரசு சார்பில் உறுதி அளிக்கப்பட்டு, பயிற்சித்தளம் மூடப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு சார்பிலும், அமைச்சர்கள் சார்பிலும் ரூ.15 லட்சம் வரை நிவாரணம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு வேலை என்பது கேள்விக்குறியாக இருந்தது.

இந்நிலையில், சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னதுரையின் தொடர்ச்சியான முயற்சியை அடுத்து சிறுவன் புகழேந்தியின் தாயாருக்கு சத்துணவுத் திட்டத்தில் சமையல் உதவியாளர் வேலை வழங்கப்பட்டது. இதற்கான ஆணையை புதுக்கோட்டைக்கு சமீபத்தில் வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

தனக்கு அரசு வேலை வழங்கிய தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் புகழேந்தியின் தயார் பழனியம்மாள், தந்தையார் கலைச்செல்வன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் கவிதா ராமுவை, எம்எல்ஏ எம்.சின்னதுரையுடன் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர். உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச்செயலாளர்எஸ். கவிவர்மன், செயற்குழு உறுப்பினர் சு.மதியகழன், நார்த்தாமலை ஊராட்சி மன்றத் தலைவர் வேலு மற்றும் ஜெயச்சந்திரன் உள்ளிட்டோர் இருந்தனர்.






புதுக்கோட்டை நகரை சேர்ந்த க .கார்த்திகேயன் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தரவு மேலாண்மை பிரிவு மாநில செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தரவு மேலாண்மை பிரிவு மாநில செயலாளராக பொறுப்பேற்ற கே .கார்த்திகேயனுக்கு கட்சி நிர்வாகிகளும், சமூக ஆர்வலர்களும் வாழ்த்து தெரிவித்தனர்.

### சத்தீஸ்கரில் ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன்

# 100 மணி நேரப் போராட்டத்திற்குப் பின் உயிருடன் மீட்பு

சத்தீஸ்கர் ஜூன்.16-

சத்தீஸ்கரில் ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன் 100 மணி நேரப் போராட்டத்திற்குப் பின் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஜாங்கிரி-ஷம்பா மாவட்டம், பிஹ்ரிட் கிராமத்தைச் சேர்ந்த 10 வயது சிறுவன் ராகுல், கடந்த 10 ஆம் தேதி தனது வீட்டின் அருகேயுள்ள பயனற்ற ஆழ்துளை கிணற்றுள் தவறி விழுந்தான். சுமார் 60 அடி ஆழத்தில் சிக்கிக் கொண்ட சிறுவனை மீட்கும் பணியில் ராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படையினர் உட்பட பல குழுவினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

மீட்புக் குழுவினரால், ஆழ்துளை கிணற்றின் அருகே மிகப்பெரிய சுரங்கம் தோண்டப்பட்டு அதன் வழியாக குழந்தையைமீட்டுள்ளனர். பணிகள் நடைபெற்று வந்த நிலையில், 100 மணி நேரத்திற்குப் பின்புராகுல் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் அவனது உடல் நிலை நன்றாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# தக்கலை அருகே கடன் தொல்லையால் கட்டிட தொழிலாளி விஷம் குடித்து தற்கொலை

கன்னியாகுமரி ஜூன்.16-

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் அருகே உள்ள சிவன் கோவில்தெருவை சேர்ந்த கட்டிட தொழிலாளி சதாசிவம் (53). இவரது மனைவி சாந்தி (36). இவர்களுக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். சதாசிவம் தற்போது குடும்பத்துடன் தக்கலை அருகே உள்ள அமலா கான்வென்ட் தெருவில் வசித்து வந்தார்.

இவர் ஊரில் பல பேரிடம் வாங்கிய கடனை திருப்பி கொடுக்க முடியாமல் அங்கிருந்து தக்கலை வந்ததாக தெரிகிறது. இதனால் மனமுடைந்த அவர் தினமும் அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்துள்ளார். இதனால் கணவன் மனைவி இடையே அடிக்கடி சண்டை வந்ததாக தெரிகிறது.

இந்நிலையில் குடிபோதையில் வீட்டுக்குவந்தசதாசிவம் படுத்து தூங்கியுள்ளார். இந்நிலையில் அதிகாலை 3 மணி அளவில் அவரது மனைவி எழுந்து பார்த்த



போது சதாசிவம் அருகில் விஷமருந்து பாட்டில் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனே கணவரை எழுப்பி பார்த்துள்ளார்.

அப்போது அவர் எழும்பாததால் இது குறித்து தக்கலை போலீசாருக்கு தகவல் கொடுத்துள்ளார். தகவல் அறிந்து வந்த போலீசார் சதாசிவத்தின் உடலை கைப்பற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சதாசிவம் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். போலீசார் அவரின் உடலைகைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும்,இது குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஆந்திராவில் குழந்தை சிவப்பாக பிறந்ததால்

# மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு தந்தையே குழந்தையை அடித்து கொலை செய்த கொடூரம்

ஆந்திரா ஜூன்.16-

குழந்தை சிவப்பாக பிறந்ததால் மனைவி மீது சந்தேகம் அடைந்த கணவர் 6 மாத குழந்தையை அடித்து கொலை செய்துள்ளார்.

ஆந்திர மாநிலம், கர்னூல் மாவட்டம், ஆர்வக் கல்லு பகுதியை சேர்ந்தவர் ரங்கா முரளி ஆட்டோ டிரைவர். இவருடைய மனைவி வீணா. இவர்களுக்கு முனி வர்ஷா என்ற 6 மாத ஆண் குழந்தை இருந்தது. தற்போது ரங்கா முரளி நன்னூர் பகுதியில் உள்ள பேரடைஸ் அடுக்குமாடி குடியிருப்பில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். ரங்கா முரளி மனைவி வீணாவிடம், நான் கருப்பாக இருக்கிறேன் ஆனால் பிறந்த குழந்தை சிவப்பாக உள்ளதால் அந்த குழந்தை எனக்கு பிறக்கவில்லை என கூறி அடிக்கடி சண்டையிட்டு வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் மது போதையில் வந்த ரங்கா முரளி மனைவியிடம் எனக்கு பிறக்காத குழந்தை உயிருடன் இருக்க கூடாது என கூறி பூட்டால் குழந்தையின் தலையில் அடித்ததாக கூறப்படுகிறது. இதில் குழந்தைரத்தவெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தது.

மேலும் முரளி வீணாவையும் கொலை செய்ய முயன்றதாக கூறப்படுகிறது.வீணாவின் அலறல் சத்தம் கேட்ட அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து பார்த்த போது குழந்தை இறந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

மேலும் இது தொடர்பாக கர்னூல் 4-வது டவுன் போலீசாருக்கும் தகவல் கொடுத்தனர். தகவல் அறிந்து வந்த போலீசார் குழந்தையின் உடலை கைப்பற்றினர்.மேலும் இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர். மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு தந்தையே தனது குழந்தையை அடித்து கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கான வளாக நேர்காணல்



புதுக்கோட்டை ஜூன்.16-

செந்தூரான் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு நிமடூஸ் ஸ்மைல் மொபிலிட்டி நிறுவனத்தின் மூலம் வளாகநேர்காணல்நடத்தி மாணவர்களை தேர்வு செய்து பணிஆணை வழங்கப்பட்டது

புதுக்கோட்டை மாவட்டம், லேணாவிலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நிமடூஸ் ஸ்மைல் மொபிலிட்டி நிறுவனத்தில் பணிபுரிவதற்காக பொறியாளர்களை தேர்வு செய்வதற்கான வளாக நேர்காணல் நேற்று நடைபெற்றது. அதில் இயந்திரவியல் துறை, மின்னியல் மற்றும் மின்னணுவியல், மின்னணுவியல் மற்றும் தொலை தொடர்பியல், அமைப்பியல் மற்றும் கணினிப் பொறியியல் துறைகளைச்சார்ந்தஇறுதி ஆண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நிமடூஸ் ஸ்மைல் மொபிலிட்டி மேலாளர் திவ்யா மற்றும் மனிதவள மேலாளர் தாரனி மாணவர்களுக்கு மூன்று கட்டமாக எழுத்துதேர்வு, குழு கலந்துரையாடல் மற்றும் நேர்முகத்தேர்வும் நடத்தினார். இத்தேர்வில் திறன்வாய்ந்த 15 மாணவர்கள், நிமடூஸ் ஸ்மைல் மொபிலிட்டி நிறுவனத்திற்காக தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் கல்லூரியின் தலைவர் ஏ.வி.எம். செல்வராஜ், துணைத்தலைவர் எஸ். நடராஜன், நிர்வாக இயக்குனர் ஆர்.வயிரவன், முதன்மைச் செயல் அதிகாரி ஏ.வி.எம்.எஸ். கார்த்திக், கல்லூரியின் முதல்வர் க.கணேஷ்பாபு, செயலாளர் டி.தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் நிமடூஸ் ஸ்மைல் மொபிலிட்டி மனிதவள மேலாளர் மாணவர்களுக்கு பணி ஆணை வழங்கினார். வேலைவாய்ப்பு நேர்காணலிற்க்கான ஏற்பாடுகளை வேலைவாய்ப்பு அதிகாரி எஸ். தினேஷ் குமார் செய்திருந்தார்

# தென்காசி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்களில் திமுக ஒன்றிய செயலாளர் பதவிக்கு விருப்ப மனு தாக்கல்



தென்காசி ஜூன்.16-

தென்காசி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்களில் திமுக ஒன்றிய செயலாளர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து விருப்ப மனு பெறப்பட்டது. திமுகவின் 15வது உட்கட்சி அமைப்பு தேர்தல் நடந்து வருகிறது, இதில் வார்டு, நகர, பேரூர் கழக, ஒன்றிய செயலாளர் பதவிக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

அதன்படி ஒன்றியங்களில் திமுக ஒன்றிய செயலாளர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்ப மனுக்கள் பெறப்பட்டு தலைமை கழக பிரதிநிதி தேர்தல் பிரிவு காந்திசெல்வன் முன்னிலையில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. நேற்று சென்னை திமுக தலைமைச் செயலகத்தில் இருந்து வருகை தந்த கடையநல்லூர் திமுக ஒன்றிய செயலாளர் சுரேஷ்க்கு புளியங்குடி நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் திமுக நகர செயலாளர் எ.அந்தோணிசாமி தலைமையில் சிந்தாமணியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கோ. பூசை பாண்டியன், மாவட்ட பிரதிநிதி அருணாச்சலம், வழக்கறிஞர் சுரேஷ், மாவட்ட பிரதிநிதி பெருமாள் மாரிச்செல்வம், வாசுதேவநல்லூர் ஒன்றிய துணைத்தலைவர் சந்திரமோகன், 2 வார்டு விஜயலட்சுமி, மாரிக்கனி, கார்த்திகேயன், விக்ரம் மணிகண்டன், 18-வது வார்டு மாரிச்செல்வம், ஈஸ்வர குமார், முருகேஷ், 30வது வார்டு வள்ளி அண்ணாமலை, மகேஷ், புளியங்குடி நகர்மன்ற 21-வதுவார்டு உறுப்பினர் கவிதா மாரியப்பன், 18வதுவார்டு உமா மகேஸ்வரி, ஆசைக்கனி, ஆனந்தராஜ், கார்த்திக், ஆகியோர் கலந்து கொண்டு கடையநல்லூர் ஒன்றிய செயலாளருக்கு சிறப்பான வரவேற்பு அளித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

# இன்று நாடு முழுவதும் கவர்னர் மாளிகை நோக்கி முற்றுகையிடும் போராட்டம் – காங்கிரஸ் அறிவிப்பு

டெல்லி ஜூன்.16-

நாடு முழுவதும் உள்ள கவர்னர் மாளிகைகள் இன்று முற்றுகையிடப்படும் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

நேஷனல் ஷெரால்டு நிதி முறைகேடு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தியிடம், அமலாக்கத்துறை தொடர்ந்து 3வது நாளாக விசாரணை நடத்தி வருகிறது. இந்த விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் அக்கட்சியினர் மூன்று நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில்,



டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா, டெல்லி போலீசார் காங்கிரஸ் அலுவலகத்திற்குள் நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இது சட்டவிரோத செயல் ஆகும். இதில் ஈடுபட்ட காவல்துறையினர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், அவர்கள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா வலியுறுத்தினார்.

டெல்லி போலீசாரின் இந்த அத்துமீறலை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் இன்று நாடு முழுவதும் உள்ள கவர்னர் மாளிகைகள் முற்றுகையிடப்படும் என தெரிவித்த ரன்தீப் சிங் சுர்ஜேவாலா, அதோடு, மாவட்ட அளவிலும் போராட்டங்கள் நடத்தப்படும் என்றார்.

# அதிமுக ஊராட்சி மன்றத் தலைவர், துணைத்தலைவர் உட்பட 100 பேர் திமுகவில் இணைந்தனர்



தரங்கம்பாடி, ஜூன்.16:

மயிலாடுதுறை மாவட்டம் பொறையாரில் அதிமுக ஊராட்சி மன்ற தலைவர் உட்பட 100 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணைந்தனர்.

செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பிள்ளைபெருமாள் நல்லூர் அதிமுக ஊராட்சி மன்ற தலைவரும், ஒன்றிய மகளிர் அணி தலைவரும்மான தீபா முனுசாமி தலைமையில் துணைத் தலைவர் நவநீதம், வார்டு உறுப்பினர் கலாராணி உள்ளிட்ட 100 -க்கும் மேற்பட்ட அதிமுக கட்சியை சேர்ந்தவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி செம்பை தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் எம். அப்துல் மாலிக், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் ஆகியோரின் ஏற்பாட்டில், பொறையாரில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

இந்நிகழ்வில், நாகை வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் ஞானவேலன், மாவட்ட திமுக பொருளாளர் ஜி.என். ரவி, அவைத் தலைவர் மனோகரன், மாவட்ட பிரதிநிதி மணிமாறன், துணைச் செயலாளர் ஏ.கே. ஆனந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சித்திக், ஒன்றிய குழு துணை தலைவர் பாஸ்கர், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் அமுர்த விஜயகுமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செந்தில், ஊராட்சி மன்ற தலைவர்கள் தட்சிணாமூர்த்தி நாகராஜன் ரங்கராஜன் சாமிநாதன் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# போலகம், எரவாஞ்சேரி ஊராட்சிகளில் பேரிடர் மேலாண்மை பயிற்சி



நாகப்பட்டினம், ஜூன்.16–

திருமருகல் ஒன்றியம் போலகம் ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் குறுவட்ட பொறுப்பாளர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு போலகம் ஊராட்சி மன்ற தலைவர் பவுஜியாபேகம் அபுசாலி தலைமை தாங்கினார்.

திருமருகல் வருவாய் ஆய்வாளர் சுந்தர்,மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சிங்காரவேலு,ஒன்றிய குழு உறுப்பினர் லதா அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தார்.இதில் திருமருகல் தீயணைப்பு நிலைய அலுவலர் திலக்பாபு மற்றும் தீயணைப்பு வீரர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். நிகழ்ச்சியில் கிராம நிர்வாக அலுவலர் செந்தில்,ஊராட்சி செயலாளர் சாமிநாதன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

அதேபோல் எரவாஞ்சேரி ஊராட்சி துறையூரில் ஊராட்சி மன்ற தலைவர் ரஜினிதேவி பாலதண்டாயுதம் தலைமையிலும்,மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ரமேஷ் முன்னிலையிலும் தீயணைப்பு வீரர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். இதில் ஊராட்சி மன்ற துணை தலைவர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

### தமிழக அரசின் வரலாற்றில்

# நீதி துறையால் பாராட்டுப் பெற்ற ஒரே அரசு தமிழக அரசும், நமது முதல்வரும் தான் என சட்டதுறை அமைச்சர் பதில்



செங்கல்பட்டு , ஜூன்.16–

செங்கல்பட்டு மாவட்டம்,மதுராந்தகம் அடுத்த படாளம் அருகே உள்ள கற்பக விநாயகா பொறியியல் கல்லூரியில் 20 ஆம் ஆண்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு கற்பக விநாயகா கல்வி குழுமத்தின் நிறுவனரும் தமிழக சட்டம், நீதித்துறை மற்றும் சிறை துறை, அமைச்சருமான எஸ். ரகுபதி தலைமை தாங்கினார். கல்லூரியின் நிர்வாக இயக்குனர் அண்ணாமலைரகுபதி முன்னிலை வகித்தார்.

முன்னதாக கல்லூரியின் இயக்குனர் மீனாட்சி அண்ணாமலை வரவேற்றார். கல்லூரி முதல்வர் காசிநாத பாண்டியன் ஆண்டறிக்கை வாசித்தார். இந்த விழாவில் திரைப்பட நடிகரும், பின்னணி பாடகருமான ஜி.வி. பிரகாஷ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவரின் 100% வருகை, கல்வியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்கள், கல்லூரி பேராசிரியர்கள் நினைவு பரிசு சான்றிதழ் வழங்க பட்டது. கல்லூரியின் டீன் சுப்பாராஜ் வாழ்த்துரை வழங்கினார்.அதனைத் தொடர்ந்து, கல்லூரி மாணவ, மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

செய்தியாளர்களுக்கு சட்டத்துறை அமைச்சர் பதிலளிக்கையில், நீதிமன்றம் நீதித்துறை தமிழக அரசின் வரலாற்றில் நீதித்துறையால் ஒன்றிய மாநில நீதிமன்றத்தால் பாராட்டைப் பெற்ற ஒரு அரசு தமிழக அரசு ஒரே முதல்வர் தமிழக முதல்வர் என்றும் கூறினார்

தமிழக முதலமைச்சர் அவர்கள் நீதித்துறை சிறப்பாக நடைபெற வேண்டும் ஆகவே நீதித்துறை சார்ந்த எந்த ஒரு கோரிக்கை என்றாலும் அதை விரைவாக முடித்துத் தருகிறார் நமது முதல்வர் என சட்டத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

# அறந்தாங்கி அருகே முறைகேடாக மண் அள்ளுவதாக வந்த புகாரை விசாரிக்க சென்ற தலையாரி கார் மோதி பலி



அறந்தாங்கி ஜூன்.16–

அறந்தாங்கி அருகே ஆளப்பிறந்தான் குடிக்காடு கண்மாயில் அதிகளவில் முறைகேடாக இருப்பாட்டு மண் எடுப்பதாக வந்த புகாரையடுத்துசம்பவஇடத்தை பார்வையிட்டு திரும்பும்போது சாலை ஓரம் நின்று அதிகாரிகளுக்கு தகவலை தெரிவித்து கொண்டிருந்த ஆளப்பிறந்தான் தலையாரி செந்தில், பின்னால் வந்த கார் மோதி சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே ஆளப்பிறந்தான் குடிக்காடு கண்மாயில் முறைகேடாக இருப்பாட்டு மண் அள்ளுவதாக விஏஓ-விற்கு தகவல் வந்துள்ளது. இதனையடுத்து தலையாரி செந்திலை குடிக்காடு கண்மாய் சென்று பார்வையிட சொன்னதையடுத்து, கண்மாய்க்கு சென்ற செந்தில் இருப்பாட்டு மண் அள்ளியதை விசாரித்து விட்டு திரும்பும்போது சாலை ஓரத்தில் நின்றுகொண்டு விஏஓ-விற்கு தகவல் கொடுத்துள்ளார். அப்போது காரைக்குடியில் இருந்து அறந்தாங்கி நோக்கி அதிவேகமாக வந்த கார் தலையாரி செந்தில் மீது மோதியதில் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

காரை ஓட்டி வந்தவர் போசம்பட்டியை சேர்ந்தவர் என்பதும், விபத்து நடந்தவுடன் காரை ஓட்டியவர் தலைமறைவாகியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. விபத்தில் இறந்த தலையாரி செந்திலுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர்.

இறந்த தலையாரியின் இறப்பில் சந்தேகம் இருப்பதாகவும் விபத்துக்கு காரணமான காரை ஓட்டிய நபரை உடனடியாக கைது செய்ய வேண்டும் எனவும் அவரது உறவினர்கள் அரசு மருத்துவமனை முன்பாக சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com

# மாணவ மாணவியர்களை அரசு பள்ளியில் சேர்க்க விழிப்புணர்வு நடைப்பேரணி



செய்யூர் :-ஜுன் -16

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட சீவாடி ஊராட்சியில் தமிழக அரசு அறிவித்துள்ள ஆணைப்படி அரசு பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கான சேர்க்கை நடைபெற்று கொண்டிருக்கின்றது அதற்கான விழிப்புணர்வு நடைப்பேரணி நடைபெற்றது.

இதில் ஊராட்சி மன்றத்தலைவர் அரங்கநாதன் முன்னிலையில், தலைமை ஆசிரியர் இராஜா தலைமையில் நடைபெற்றது. மேலும் 4-வது வார்டு உறுப்பினர் சீவாடி சதிசுவளவன், பெற்றோர் கழக சங்கத்தலைவர் ப.ஆனந்த் பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் தனலட்சுமி இராஜேஷ் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர் சிறுத்தை முரளி இவர்கள் அனைவரும் கலந்து கொண்டு பேரணியை சிறப்பான முறையில் நடத்திவைத்தனர்



▶ கடலூர் மாநகராட்சி நான்காவது மண்டலத்தில் குப்பை தரம் பிரிக்கும் கிடங்கை கடலூர் மாநகர மேயர் சுந்தரிராஜா ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது நகர்வல அலுவலர், மாநகராட்சி பொறியாளர், கடலூர் மாநகர திமுக செயலாளர் கே.எஸ்.ராஜா மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.



▶ முதலியார்குப்பம்படகுஇல்லத்தில்சுற்றுலாத்துறைசார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கம் அடுத்த கிழக்குகடற்கரை சாலையில் உள்ள முதலியார்குப்பம் படகு இல்லத்தில் சுற்றுலாத் துறை சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி கலந்துகொண்டார்.




▶ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் கடலூர் தேவனாம்பட்டினத்தில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளை கடலூர் மாநகர மேயர் சுந்தரிராஜா கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். கடலூர் மாநகர செயலாளர் அண்ணன் கே.எஸ் ராஜா, நகர்வல அலுவலர், மாவட்ட விளையாட்டு அலுவலர், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் விளையாட்டு அதிகாரிகள் உடனிருந்தனர்கள்.



▶ கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் உள்ள வேளாண்மை அலுவலகம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களை பார்வையிட்டு அவற்றின் தரம் மோசமாக உள்ளது என்று தெரிவித்து பணிகளை நிறுத்தி அங்கு உள்ள பொருட்கள் அனைத்தையும் ஆய்வு செய்த பின்னரே வேலைகளை தொடங்க வேண்டும் என்று பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

### சென்னை, பாடியை அடுத்த கொரட்டூரில்

# அருள்மிகு ஸ்ரீ பாடலாத்திரி சீயாத்தம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா





சென்னை , ஜூன்.16–

சென்னை, பாடியை அடுத்த கொரட்டூர் வடக்கு, அக்ரஹாரம் பகுதியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ பாடலாத்திரி சீயாத்தம்மன் ஆலயமகாகும்பாபிஷேகவிழா அருள்மிகு ஸ்ரீ பாடலாத்திரி சீயாத்தம்மனுக்கும் இதர பரிவார மூர்த்திகளுக்கும் திருப்பணிகள் செய்விக்கப்பட்டு, திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

அதனை தொடர்ந்து, மகா அபிஷேகம், ஆரத்தி, தீபாராதனையும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், 7வது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, அரிமா சங்க மாவட்ட தலைவர் எம். டி.ஆர்.நாகராஜ், 83 வது வட்ட மாமன்ற உறுப்பினர் உஷா நாகராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர் சீ.லோகநாதன், ஆலய நிர்வாகிகள் லோகநாதன், தருமன், கோ.ராஜ்குமார், தவமணி, குரு, சேகர், சரவணன், எட்டி, அமிர்தலிங்கம், கோவிந்தன் மற்றும் திருப்பணிக் குழுவினர், செயல் அலுவலர் ஆ.குமரன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# தருமபுரம் ஆதீனம் 27–வது குருமகா சன்னிதானத்தை சந்தித்து அமைச்சர் மெய்யநாதன் ஆசி பெற்றார்



மயிலாடுதுறை, ஜூன்- 16;

மயிலாடுதுறை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகைபுரிந்த சுற்றுசூழல், காலநிலை மாற்றம் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மெய்யநாதன் மதியம் தருமபுரம் ஆதீனத்திற்கு சென்றார். அவருக்கு ஆதீன நிர்வாகம் சார்பில் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து தருமை ஆதீனம் 27–வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்து அமைச்சர் மெய்யநாதன் ஆசிபெற்றார். ஆதீன கலைக்கல்லூரியின் 75 -ஆவது பவளவிழா நிறைவை முன்னிட்டு வரும் ஆகஸ்டு மாதம் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. தொடர்ந்து கல்லூரி நிர்வாகம் சார்பில் கடிதத்தை அமைச்சர் மெய்யநாதனிடம் வழங்கினர். இதில் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் பூம்புகார் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், நாகை வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் மு.ஞானவேலன், மாவட்ட பொருளாளர் ஜி.என்.ரவி, நகர்மன்றத் தலைவர் செல்வராஜ், அரசு வழக்கறிஞர் ராமசேயோன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் திராவிட முன்னேற்ற கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# மின்னல் ஊராட்சியில் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம்



செங்கல்பட்டு , ஜூன்.16–

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள மின்னல் ஊராட்சியில் பாரத பிரதமரின் தேசிய திட்டத்தின் கீழ் வரும் அச்சிறுப்பாக்கம் புதிய சகாப்தம் அரிமா சங்கம் மற்றும் மின்னல் ஏழை மாணவர்கள் நல சங்கம் காஞ்சிபுரம் மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்கம் மற்றும் பம்மல் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச கண் பரிசோதனை கண்புரை அறுவை சிகிச்சை முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் கண்புரை நோய் உள்ள ஏழை எளிய மக்களுக்கு உலகத் தரச்சான்றிதழ் பெற்ற பம்மல் சங்கரா கண் மருத்துவமனை விழி லென்ஸ் பொருத்தி அறுவை சிகிச்சை மற்றும் போக்குவரத்து தங்கும் வசதி உணவு உட்பட அனைத்தும் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும் பயனாளிகளுக்கு காலை சிறப்பான அன்னதானம் வழங்கிபாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இதில் அச்சிறுப்பாக்கம் புதிய சகாப்தம் லயன்ஸ் சங்கம் சார்பில் நான்காவது முறையாக 50 பயனாளிகள் பங்குபெற்று அறுவை சிகிச்சை செய்து பயனடைந்தனர்.இந்நிகழ்வில் அச்சிறுப்பாக்கம் புதிய சகாப்தம் அரிமா சங்கம் சாசன தலைவர் லயன் பி.சக்திவேல், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக புதிய சங்க விரிவாக்கம் மாவட்ட தலைவர் லயன் ரா.ரவிச்சந்திரன், குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இதில் அச்சிறுப்பாக்கம் புதிய சகாப்தம் அரிமா சங்க சாசன செயலாளர் லயன் ஆர்.சத்தியகுமார், தகவல் தொழில்நுட்ப இயக்குனர் செய்தியாளர் லயன் எஸ்.ராஜசேகர், ஏழை மாணவர்கள் நலசங்க பொதுச் செயலாளர் மின்னல் மு.ஸ்ரீதர், உட்பட அரிமா சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# நேதாஜி ஆசாத் ஹிந்த் மாநாடு மு.ரஜினிக்கு சாதனையாளர் விருது வழங்கினார் ஆளுநர் ஆர்.என்.ரவி



சென்னை , ஜூன்.16–

நேதாஜி அறக்கட்டளை சார்பாக நேதாஜி படைவீரர்கள் குடும்பம் மற்றும் இந்திய தேசிய ராணுவத்துடன் இணைந்து ஆசாத் ஹிந்த் மாநாடு மற்றும் கண்காட்சியை நேதாஜி தளபதிகள் மற்றும் வாரிசுகள் அவருடைய சேவையை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்தது. தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி கண்காட்சி மற்றும் மாநாட்டை தொடங்கி வைத்தார் மற்றும் அனைத்து நேதாஜி குடும்ப வீரர்கள் மற்றும் இராணுவம், காவல்துறை மற்றும் பல்வேறு துறைகளில் தாய்நாட்டிற்காக பெரிய அளவில் சேவை செய்த நேதாஜி வாரிசுகளையும் கௌரவித்தார்.

நிகழ்ச்சியின் போது நேதாஜிக்கு உரிய மரியாதையுடன் அனைத்து முக்கியஸ்தர்களும் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். ஒரு நாட்டின் வருங்காலம் நலம் பெற அந்த நாட்டின் கல்வி சிறப்பாக இருக்க வேண்டும். இந்த நிகழ்ச்சியின் போது கல்வியாளர் மற்றும் சமூக ஆர்வலர் சென்னையை சார்ந்த பாரத சிக்ஷா ரத்னா டாக்டர் மு. ரஜினி, தலைவர் , லட்சியம் குழுமம், சமூகத்திற்குச் செய்த சிறந்த சேவைகளைப் பாராட்டி தமிழக ஆளுநர் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அகில இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் வெற்றியாளர் அமைப்பின் பொதுச் செயலாளர் கு.குருமூர்த்தி, நிறுவனர் நேதாஜி அறக்கட்டளை, மகேஷ், நிறுவனர் தலைவர் நேதாஜி நவ பாரத் அறக்கட்டளை, ஸ்ரீமதி லட்சுமி கிருஷ்ணன், ஜான்சி படைப்பிரிவின் ராணி சர்வஜித் தில்லான், கர்னல். ஜி.எஸ். தில்லான், ஐஎன்ஏ வீரன் குடும்பம், ஆர். நடராஜ். ஐபிஎஸ், முன்னாள் எம்எல்ஏ, ஸ்ரீமதி கோமலா கோபிநாட், மேஜர் ஜெனரல் ஏ.டி. லோகநாதன், டி.டி. வெக்கோ ஸ்வரோ, போஸ்வுயி ஸ்வரோ, டிபி, சேதுசேசன் மற்றும் சண்முகம், தலைவர் அகில இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசு அமைப்பு ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை முனைவர் மு. ரஜினி ஒருங்கிணைத்து உரை ஆற்றினார்.

கண்காட்சியில், நேதாஜியின் மறக்கமுடியாத படங்கள், அவரது சொந்த கடிதங்கள், கையொப்பங்கள் மற்றும் முத்திரைகள், சான்றுகள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன, டாக்டர் மதனன் நடராஜன், அமைப்பாளர் மோகன், செயலாளர் பிரேமானந்த் உட்பட நேதாஜி அறக்கட்டளை குழு., உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# அரிமளம் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் அங்கக சான்றளிப்பு என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி



அரிமளம் ஜூன்.16–

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2022-2023 அங்கக சான்றளிப்பு என்ற தலைப்பில் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சி மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது . இந்த பயிற்சிக்கு அரிமளம் வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன் தலைமை வகித்தார்.

முன்னதாக வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ரெங்கசாமி அனைவரையும் வரவேற்று பயிற்சி குறித்து முன்னுரை வழங்கினார் . அங்கக வேளாண்மை சான்றின் முக்கியத்துவம் குறித்து விதைச்சான்று துறையின் விதை சான்று அலுவலர் இளஞ்செழியன் சிறப்புரையாற்றினார்.

மேலும் சான்று பெற விரும்புவோர் ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், மரபணு மாற்றம் செய்யப்பட்ட மற்றும் இரசாயன நேர்த்தி செய்த விதைகளை கட்டாயம் பயன்படுத்தக் கூடாது. அங்கக சான்று பெற கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் மற்றும் விண்ணப்பிக்க வேண்டிய முறைகளையும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர் நந்தகுமார் தோட்டக்கலை பயிர்களுக்கான அங்கக சாகுபடி தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறினார் . முடிவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் லட்சுமி பிரபா நன்றி கூறினார்.








சென்னை,தமிழ்நாடு மின்சார வாரியம் தலைமை அலுவலகத்தில், நேற்று. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமையில் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அனைத்து மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் ராஜேஷ் லக்கானி, இயக்குனர் பகிர்மானம் சிவலிங்கராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுக்கூர் ஒன்றியத்தில் அரசு பள்ளிகளுக்கு மின்விசிறி குழல்விளக்குகள் வழங்கல்



தஞ்சை ஜூன்.16–

தஞ்சை ஜோதி அறக்கட்டளை சார்பில், தஞ்சை மாவட்டம் மதுக்கூர் ஒன்றியம் மூத்தாக்குறிச்சி அரசு உயர்நிலை பள்ளி மற்றும் தொடக்கபள்ளிக்கு சுமார் 50,000 ரூபாய் மதிப்பீட்டில் மின்விசிறிகள் மற்றும் மின் குழல்விளக்குகள் மூத்தாக்குறிச்சி அரசு உயர்நிலை பள்ளி வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் மூத்தாக்குறிச்சி அரசு உயர்நிலை பள்ளி ஆசிரியர் ரவிச்சந்திரன், மூத்தாக்குறிச்சி அரசு தொடக்கபள்ளி ஆசிரியர் செல்வராணி ஆகியோர் கலந்து கொண்டு ஜோதி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட மின்விசிறிகள் மற்றும் குழல்விளக்குகளை பெற்றுக்கொண்டார்.

ஜோதி அறக்கட்டளை செயலாளர் பிரபு ராஜ்குமார் பேசுகையில், " தனியார் பள்ளிகளை போல் அரசு பள்ளிகளில் கல்விதரத்தைஉயர்த்தஅரசு தரப்பில் திட்டங்களை செயல்படுத்தும் போது அதற்கேற்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தனியார் நிறுவனங்கள் , தொண்டு நிறுவனங்கள் , ஆர்வமுள்ள தனிநபர்கள் முன்வரும்போது அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை உயரும் என்று நம்பிக்கை தெரிவித்தார் . இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை மேலாளர் சுந்தரி, களப்பணியாளர்கள் சிவரஞ்சனி , ராஜ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர் .

# அன்னவாசல் ஒன்றியத்தில் இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கு கையேடு வழங்கும் விழா



புதுக்கோட்டை ஜூன்.16–

அன்னவாசல் வட்டார வளமையத்தில் இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கு கையேடு வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

அன்னவாசல் வட்டாரக் கல்வி அலுவலர்கள் அலெக்ஸாண்டர், கலா ஆகியோர் கலந்துகொண்டு இராப்பூசல் அருகே உள்ள கலிங்கப்பட்டி பகுதியைச் சேர்ந்த தன்னார்வலர் கௌசல்யா, புல்வயலைச் சேர்ந்த தன்னார்வலர் ஆர். சுபாஷினி, இலுப்பூரைச் சேர்ந்த தன்னார்வலர் டயானா ரூபி ஆகியோருக்கு தன்னார்வலர் கையேடு, பட அட்டைகள் மற்றும் கதைப்புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கினார்.

நிகழ்வின் போது அன்னவாசல் வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொறுப்பு)ரோஸ்மேரி சகாயராணி, ஆசிரிய பயிற்றுநர்கள் இரத்தின சபாபதி, செந்தில்குமார் மற்றும் இல்லம் தேடி கல்வித்திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.

மேலும், அன்னவாசல் ஒன்றியத்தில் உள்ள 707 தன்னார்வலர்களுக்கும் கையேடுகள் மற்றும் படக்கதைகள் மற்றும் கதைப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

# ஈரோடு அருகே சுற்றுலா வேன் மீது அரசு பேருந்து மோதிய விபத்தில் வாலிபர் பலி



ஈரோடு ஜூன்.16–

சென்னையிலிருந்து 14 பேர் கொண்ட நண்பர்கள் ஒரு சுற்றுலா வேனில் வெள்ளியங்கிரி மலைக்கு சுற்றுலா வந்திருந்தனர். பின்னர் கோவையிலிருந்து ஒகேனக்கல் சுற்றுலா செல்ல திட்டமிட்டு பவானி-மேட்டூர் மெயின் ரோட்டில் சென்று கொண்டிருந்தனர்.

இந்நிலையில் அம்மாபேட்டை அருகே உள்ள குதிரை கல்மேடு அருகிலுள்ள பெட்ரோல் பங்க் அருகே சென்று கொண்டிருந்த போது மேட்டூரில் இருந்து பவானி நோக்கி வந்த அரசு பேருந்து திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சுற்றுலா வேனின் பின் பக்கத்தில் மோதியது. இதில் வேனில் வந்த 4 பேர் படுகாயமடைந்தனர்.

உடனடியாக அக்கம்பக்கத்தினர் காயம் அடைந்தவர்களை மீட்டு பவானி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். முதலுதவி சிகிச்சை செய்து பின்னர் அங்குள்ள தனியார் மருத்துமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சென்னை ஆண்டார்குப்பம் பகுதியைச் சேர்ந்த டில்லி மகன் ராஜேஷ்குமார்(26) என்ற பட்டதாரி வாலிபர் நேற்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதில் படுகாயமடைந்த சென்னை, ஆண்டார்குப்பம் பகுதியை சேர்ந்த பிரபு, ரூபன் குமார், சந்தோஷ் ஆகியோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது குறித்து அறிந்த அம்மாபேட்டை போலீசார் உயிரிழந்த ராஜேஷ்குமார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பவானி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கயத்தாறு அருகே ஆம்னி பேருந்து டயர் வெடித்து கவிழ்ந்த விபத்தில் டிரைவர் உட்பட 3 பேர் பலி



தூத்துக்குடி ஜூன்.16–

கயத்தாறு அருகே ஆம்னி பஸ் கவிழ்ந்த விபத்தில் டிரைவர் உட்பட 3பேர் உயிரிழப்பு.

குமரி மாவட்டம், நாகர்கோவில் வடசேரி பஸ் நிலையத்தில் இருந்து தனியார் ஆம்னி பஸ் ஒன்று சென்னைக்கு புறப்பட்டது. பஸ்சை விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள சோமநாதபுரத்தை சேர்ந்த பாண்டி(32) என்பவர் ஓட்டிச் சென்றார். பஸ்சில் 28 பயணிகள் இருந்தனர். தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு அருகே நள்ளிரவு 12 மணி அளவில் ஆம்னி பஸ் நான்கு வழிச்சாலையில் சென்றது. அங்குள்ள அரசன்குளம் பகுதியில் சென்றபோது திடீரென பஸ்சின் முன்பக்க டயர் வெடித்தது.

இதில் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையின் தடுப்புச்சுவரில் மோதி எதிர்புறமாக நெல்லைக்கு வாகனங்கள் செல்லும் சாலையில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் பஸ்சில் இருந்த பயணிகள் அனைவரும் இடிபாடுகளில் சிக்கி காப்பாற்றக்கோரி கூச்சலிட்டனர். தகவல் அறிந்த கயத்தாறு போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். நள்ளிரவு நேரம் என்பதால் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த விபத்தில் பஸ்சில் பயணித்த குமரி மாவட்டம் திருவட்டாறு அருகே உள்ள புத்தன்கடையை சேர்ந்த ஜீசஸ் ராஜன்(47), நாகர்கோவில் அருகே உள்ள கீழவண்ணான் விளையை சேர்ந்த சிவராமன்(28) ஆகிய 2 பேரும் பஸ்சுக்குள்ளேயே பரிதாபமாக இறந்தனர். பஸ் டிரைவரான பாண்டியின் கை மற்றும் கால்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி கொண்டது. அதில் இருந்து வெளியே வர முடியாமல் பாண்டி உயிருக்கு போராடி கொண்டிருந்தார். அவரை தீயணைப்பு துறையினர் கடும் போராட்டத்திற்கு பின்னர் மீட்டு நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் பாண்டி உயிரிழந்தார். இதற்கிடையே விபத்துக்குள்ளான பஸ்சின் இடிபாடுகளில் இருந்து குழந்தைகள், பெண்கள் என 10-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு நெல்லை, கோவில்பட்டியில் உள்ள அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உள்ளனர்.

# கந்தர்வகோட்டை ஒன்றிய இல்லம் தேடி கல்வி மையங்களில் கோடை விடுமுறைக்கு பின் மாணவர் மகிழ்ச்சியுடன் வருகை



கந்தர்வகோட்டை ஜூன்.16–

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில், இல்லம் தேடி கல்வித் திட்டம் ஆடல், பாடல், விழாக்கள், கொண்டாட்டம் என சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு ஆலோசனையின் படியும், புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சே. மணிவண்ணன் வழிகாட்டுதலின் படியும், கந்தர்வகோட்டை ஒன்றியம் மணப்பட்டி, நரியன் புதுப்பட்டி, புனல் குளம், தெத்துவாசல்பட்டி ஆகிய குடியிருப்புகளில் உள்ள இல்லம் தேடி கல்வி மையங்கள் இல்லம் தேடி கல்வித்திட்ட புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்துக்குமார் மற்றும் கந்தர்வகோட்டை ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் தங்கராசு மற்றும் ரகமத்துல்லா ஆகியோரால் பார்வையிடப்பட்டது.

தன்னார்வலர்கள் மணப்பட்டி சுபத்ரா, நரியின் புதுப்பட்டி அகிலா, பூங்கொடி, புனல் குளம் கலைவாணி, பரமேஸ்வரி மற்றும் தெத்துவாசல்பட்டி சத்யா ஆகியோர் கோடை விடுமுறைக்கு பின் இல்லம் தேடி கல்வி மையங்களுக்கு மாணவர்களை உற்சாகத்தோடு வரவேற்று மூன்றாம் கட்ட கற்பித்தல் உபகரணங்களை கொண்டு, பயிற்சி கட்டகத்தில் உள்ள செயல்பாடுகளை கற்பிக்க தொடங்கியுள்ளனர்.

பார்வையின் போது Google Read Along App மூலம் நடைபெற்ற ரீடிங் மாரத்தான் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களையும் அவர்களை தயார்படுத்திய தன்னார்வலர்களையும் பாராட்டியதுடன், மாணவர் வருகை பதிவு செய்யப்பட்ட விவரம், ஊக்கத்தொகை பெறப்பட்ட விவரம் போன்ற தகவல்கள் கேட்டறியப்பட்டது. கோடை விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிகள் திறக்கப்பட்டதை யொட்டி இல்லம் தேடி கல்வி மையங்களுக்கு மாணவர்கள் மகிழ்ச்சியோடு வருகை புரிந்தனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 137 பயனாளிகளுக்கு ரூ.39.32 லட்சம் மதிப்பில் உதவி உபகரணங்களை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.லலிதா, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், மயிலாடுதுறை நகர்மன்றத் தலைவர் என்.செல்வராஜ், மயிலாடுதுறை உராட்சி குழுத் தலைவர் காமாட்சிமூர்த்தி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வ.சினீவாசன் மற்றும் பலர் உள்ளனர்.

## குமரி மாவட்டம் மணவாளக்குறிச்சி அருகே

# குடும்பத்துடன் குளிக்க சென்ற போது ஆற்றில் மூழ்கி கூரியர் நிறுவன ஊழியர் பலி



கன்னியாகுமரி ஜூன்.16–

கடியபட்டணம் வள்ளியாற்றில் குடும்பத்துடன் குளிக்க சென்ற கூரியர் நிறுவன ஊழியர் ஆற்றில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

சென்னை, மேற்கு மாம்பலம் ஈஸ்வரன் கோவில் தெருவை சேர்ந்தவர் கோபாலகிருஷ்ணன் (48). இவரது மனைவி ஆனந்த செல்வி இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். இவர் சென்னையில் ஒரு கூரியர் நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வந்தார். கடந்த இரு தினங்களுக்கு முன் இவர் குடும்பத்துடன் குமரி மாவட்டம் மணவாளக்குறிச்சி அருகே சேரமங்கலத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு வந்திருந்தார். இந்நிலையில் அவர் குடும்பத்துடன் கடியபட்டணம் வள்ளியாற்றில் குளிப்பதற்கு சென்றுள்ளார்.

அப்போது குளித்து கொண்டிருந்த கோபாலகிருஷ்ணன் திடீரென மூச்சு திணறி நீரில் மூழ்கினார். உடனே அருகிலிருந்தவர்கள் அவரை மீட்டு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து அவரது மனைவி ஆனந்த செல்வி மணவாளக்குறிச்சி போலீசில் புகார் செய்துள்ளார். புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கறம்பக்குடி அருகே அரசு பள்ளிக்கு பூட்டு போட்ட தனிநபர் ஆசிரியர்கள், மாணவர்கள் வெளியில் அமர்ந்ததால் பரபரப்பு





கறம்பக்குடி ஜூன்.16–

கறம்பக்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட தட்டா ஊரணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அமைந்துள்ள இடம் தனது இடம் எனக் கூறி சின்னையா என்பவர் பள்ளிக்கூடத்திற்கு பூட்டு போட்டதால் பள்ளி குழந்தைகள் பரிதவித்தனர்

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட தட்டாஊரணி பகுதியில் கடந்த 28 ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது.

அந்த பள்ளிக்கான இடத்தை அப்போது பிச்சையா என்பவர் தானமாக பத்திரப்பதிவு செய்து பள்ளிக்கு வழங்கியுள்ளார். தற்போது அந்த இடம் பள்ளியின் பெயரில் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட பள்ளி அமைந்துள்ள இடம் தனது இடம் என பிச்சையாவின் மகன் சின்னையா கூறி வருவதோடு அடிக்கடி பள்ளிக்கு பூட்டு போடுவதை வழக்கமாக கொண்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி வந்தனர்.

இந்நிலையில் நேற்று சின்னையா சம்பந்தப்பட்ட பள்ளி நிலம் தனது என கூறி அந்த பள்ளிக்கு பூட்டு போட்டு பூட்டி உள்ளார். இதனால் பள்ளிக்கு வந்த மாணவ-மாணவிகள் பள்ளிக்கு செல்ல முடியாமல் பரிதவித்தனர்.

இதேபோல் பள்ளிக்குள் செயல்படும் அங்கன்வாடி குழந்தைகளும் பள்ளிக்கு செல்ல முடியாமல் எதிரே உள்ள சாலையிலேயே அமர்ந்து இருந்தனர். அதேபோல் ஆசிரியர்கள் அங்கன்வாடி பணியாளர்கள் மாணவ-மாணவிகள் என 50க்கும் மேற்பட்டோர் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக சாலையிலேயே அமர்ந்து இருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த கறம்பக்குடி போலீசார் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதன் பேரில் பள்ளி நுழைவாயில் திறக்கப்பட்டு குழந்தைகள் பள்ளிக்குள் சென்றனர். பள்ளிக்கு பூட்டு போட்ட சின்னையாவை போலீசார் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட பள்ளி இடம் விவகாரம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருவதாக கறம்பக்குடி வட்டாட்சியர் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார். தற்போது கணக்கின்படி சம்பந்தப்பட்ட பள்ளி அமைந்துள்ள இடம் பள்ளிக்கு சொந்தமானது எனவும் வட்டாட்சியர் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

சின்னையாவிடம் போலீசார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில் இந்த பள்ளி நிலத்தை தனது தந்தை தானமாக வழங்கியதற்காக கறம்பக்குடி பேரூராட்சியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குனர் பதவி அவருக்கு வழங்கப்பட்டு வந்ததாகவும் ஆனால் அதனை அவர் சரிவர இயக்காததால் அந்த பதவியிலிருந்து அவரை நீக்கம் செய்ய அதிகாரிகள் முடிவு எடுத்ததாகவும் இதனால் விரக்தி அடைந்த சின்னையா பள்ளிக்கு பூட்டு போட்டு உள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் இது குறித்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் 4 பிரிவின் கீழ் வழக்குபதிவு செய்து சின்னையா கைது செய்யப்பட்டார்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி அருகில் உள்ள மாதேஹள்ளி கிராமத்தில் நடைபெற்ற காளியம்மன் ஆலய கோயில் தேர் திருவிழாவின் போது சப்பரம் கவிழ்ந்து விபத்து நடந்த இடத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, போலீஸ் சூப்பிரண்டு கலைச்செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் அனிதா, சார் ஆட்சியர் சித்ரா விஜயன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தடங்கம் பி.சுப்பிரமணி, பி.என்.பி.இன்பசேகரன் உட்பட பலர் உடனிருந்தனர்.



கடலூர் மாநகர திமுக வட்டம் 19 சார்பில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு கட்சி கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகளை திமுக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள. புகழேந்தி, மாநகர திமுக செயலாளர் கேஎஸ்.ராஜா பொதுமக்களுக்கு வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் செந்தில்குமாரி, இளந்திரையன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்புத்துறைக்கு மத்திய அரசின் விருது



திருப்பூர் ஜூன்.16–

உலகஉணவுபாதுகாப்பு தினத்தையொட்டி, டெல்லியில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சார்பில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் சார்பில் உணவு பாதுகாப்பு துறையில் ஆய்வு, மாதிரிகள் சேகரிப்பு உள்ளிட்ட பணிகளுக்காக 'ஈட் ரைட் சேலஞ்ச்' விருதுக்கு தேசிய அளவில் 75 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டது.

இதில் திருப்பூர் மாவட்டமும் விருது மற்றும் பாராட்டு சான்று பெற தேர்வானது. இந்நிலையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய அரசின் விருது மற்றும் பாராட்டு சான்றை திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அதிகாரி விஜயலலிதாம்பிகையிடம் வழங்கி பாராட்டினார்.

பின்னர் திருப்பூர் மாவட்ட கலெக்டர் வினீத்திடம், உணவு பாதுகாப்பு நியமன அதிகாரி விஜயலலிதாம்பிகை தலைமையிலான உணவு பாதுகாப்பு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட விருது மற்றும் சான்றை கொடுத்து வாழ்த்து பெற்றார்கள்.

# பா.கிள்ளனூர் கிராமத்தில் உள்ள குழந்தைகள் மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



கள்ளக்குறிச்சி ஜூன்.16–

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவுகளும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை கண்டறிந்து கூடுதலாக ஊட்டச்சத்து உணவும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, பா.கிள்ளனூர் கிராமத்தில் உள்ள குழந்தைகள் மையத்தை நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் ஸ்ரீதர் ஆய்வு மேற்கொண்டார்.

இம்மையத்தில் ஏற்கனவே, காய்கறி தோட்டம் அமைக்கப்பட்டுள்ளதையும், புதியதாக ஊட்டச்சத்து மிக்க காய்கறிகள், குழந்தைகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக காய்கறி தோட்டத்தில் ஊட்டச்சத்து மிக்க காய்கறி விதைகள் தூவி நடப்பட்டன. பின்னர், குழந்தைகள் மையத்தில் குடிநீர் வசதி, கழிவறை வசதி முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டன. மேலும், குழந்தைகளுக்கு முன்பருவ கல்வியோடு நற்பண்புகளையும், நல்லொழுக்கங்களையும் குழந்தைகள் மைய அமைப்பாளர்கள் கற்றுத் தர அறிவுறுத்தப்பட்டது.



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அதிமுக அனைத்துலக எம்ஜிஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஜாகிர் உசேன் தந்தையாரின் 40ஆம் நாள் நினைவு அஞ்சலியை முன்னிட்டு திருவண்ணாமலை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட செயலாளர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பகுதியில் வசித்துவந்த அரசு பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியரும் முஸ்லீம் ஜமாத் முன்னாள் தலைவருமான ஜனாப் என்கிற எஸ்.அப்துல் பக்ஷி கடந்த மே மாதம் 4ஆம் தேதி வயது முதிர்ச்சி காரணமாக காலமானார். அதனைத்தொடர்ந்து 40ஆம் நாள் நினைவுநாளை முன்னிட்டு திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அ.இ.அதிமுக கழக செயலாளர் முன்னாள் செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் தூசி கே.மோகன், தெற்கு மாவட்ட கழக செயலாளர் போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி எஸ்.கிருஷ்ணமூர்த்தி, கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் ஆகியோர் அனைத்துலக எம்ஜிஆர் மன்ற மாநில துணை செயலாளர் வழக்கறிஞர் ஜாகிர் உசேன் மற்றும் குடும்பத்தினரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர். உடன் அதிமுக கழக நிர்வாகிகள் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் சூலக்கரை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் சத்துணவு திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வரும் பணியாளர் முத்துலட்சுமி அமைப்பாளர் பணியினை பாராட்டி 2020 21 ம் ஆண்டிற்கான சிறந்த பணியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 5ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசினையும் சான்றிதழையும் மாவட்ட கலெக்டர் மேகநாதரெட்டி வழங்கினார்.

## வெள்ளையர் கிழக்கிந்திய கம்பெனி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக

# மருது பாண்டியர்கள் வெளியிட்ட ஜம்பு தீபகற்ப பிரகடனம் 16–06–1801 இன்று

அன்பார்ந்த தமிழ் மக்களே, இந்திய ஒன்றியத்திற்கு வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்கள் படிப்படியாக இந்திய ஒன்றியம், இதில் உள்ள எல்லா மொழி வழி தேசிய இன மக்களின் மன்னர்களின், உரிமைகளில் தலையிட்டு 17-18ம் நூற்றாண்டுகளில் மொத்த இந்திய ஒன்றியத்தையே கபளீகரம் செய்து விட்டார்கள்.

இங்கு நம் தமிழ்நாட்டில் 1849-1861 இல் வந்தவாசி ஆற்காடு போர்களில் ஈடுபட்டு ஆற்காடு நவாப்பை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து அவரிடமிருந்து தமிழ்நாட்டு குறுநில மன்னர்கள், பாளையக்காரர்கள், தமிழக மக்களிடம் வரி, கப்பம், வசுலிக்கும் உரிமைகளை அநீதியாக பெற்று, வெள்ளையர்கள் நம் தமிழ்நாட்டையும் ஆட்சி, அதிகாரம், என சுரண்டத் தொடங்கி விட்டார்கள். வெள்ளையர்களுக்கு அடங்க மறுத்து சிவகங்கை முத்துவடுகநாதர் மாவீரன் பூலித்தேவன், வேலு நாச்சியார், தீரன் சின்னமலை, மருது பாண்டியர்கள், வீரபாண்டிய கட்டபொம்மன், திண்டுக்கல் கோபாலநாயக்கர், வெண்ணி காலடி, ஒண்டிப்பகடை, மாவீரன் சுந்தரலிங்கம், குயிலி, வீரன் அழகுமுத்துகோன், என எல்லோரும் வீரமரணம் அடைந்தனர். 1799ல் சிவகங்கையை ஆண்டு கொண்டிருந்த மருது சகோதரர்கள், வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்ட பாஞ்சாலக்குறிச்சி பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன் தம்பி ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்தனர். வெள்ளையர்களுக்கு கப்பம் கட்ட மறுத்தனர்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை இந்த மண்ணிலிருந்தே துரத்த 1800ம் ஆண்டே தென் இந்திய சுதேசமன்னர்கள் பாளையக்காரர்களை ஒருங்கிணைந்து ஒரு கூட்டமைப்பு படையை நிறுவி பெரும் போர் நடத்தினார்கள். (மொத்தம் 3 பெரும் போர்கள் காளையார் கோவில், சிவகங்கை பகுதிகளில் 1800-1801ல் வெள்ளையர்களுக்கு எதிராக மருது பாண்டியர்களால் நடத்தப் பெற்றது). இந்த போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி சின்ன மருது பாண்டியர், அன்றைக்கு பொதுமக்களுக்கு ஒரு பிரகடனம் வெளியிட்டார். 16-06-1801ல் வெளியிடப்பட்ட இந்த பிரகடனம் அவராலேயே ஜம்புதீபகற்ப பிரகடனம் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டு திருச்சி மலைக்கோட்டைக் கோவில் கதவுகளிலும், திருச்சிகாஜாமியாபள்ளி வாசல் சுவர்களிலும், திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தின் சுவர்களிலும் ஒட்டப்பட்டது. வெள்ளை கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் சுரண்டலையும் வஞ்சகம், சதி, சூழ்ச்சி, இவைகளையும் நாட்டு மக்கள், பஞ்சம், பசி, பட்டினி, என துன்பப்பட்டு செத்துக் கொண்டு இருக்கும் போது அவர்களின் (பிரிட்டிஷாரின்) ஈவு, இரக்கம், அற்ற அரசியல் பேராசைகளையும் அவர்கள் தோற்கடித்து துரத்தப்பட வேண்டியவர்கள் என்பதையும் தெளிவு படுத்தி இருப்பார் சின்ன மருது.



**ஸ்ரீரங்கம் கோவில், திருச்சிமலைக்கோட்டை, திருச்சி காஜாமியான் பள்ளிவாசல்**

போரில் வெள்ளை ஏகாதிபத்தியம் வஞ்சகமாக வெற்றி பெற்று 1801 ஆம் ஆண்டு மருது பாண்டியர்கள் அவர்களது படைத் தளபதிகள், படை வீரர்கள் என 500 பேரை திருப்பத்தூரில் 1801 அக்டோபர் 24-27 தேதிகளில் தூக்கிலிட்டு கொன்றது. அதன்பின் பல கட்ட போராட்டங்கள் சுமார் 150 ஆண்டுகள் நடைபெற்று இறுதியாக 1920-1947ல் பல மக்கள் போராட்டங்கள் நடைபெற்று, மாவீரன் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் தலைமையில் வெள்ளையர்களுக்கு எதிராக இந்திய தேசிய இராணுவம் அமைத்து மணிப்பூர்-இம்பால்வரை படை நடத்தி வெற்றி பெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியினர் 1920-1940ம் ஆண்டுகளில் பல போராட்டங்கள் நடத்தினார்கள். காந்தியடிகள் தலைமையில் இந்திய தேசிய பேராயக்கட்சி 1920-1946ம் ஆண்டுகளில் வெள்ளையர்களுக்கு எதிராக பெரும் மக்கள் போராட்டங்கள் நடத்தியது. இதனால் வெள்ளை ஏகாதிபத்தியம் ஆகஸ்ட் 15, 1947 இந்தியாவுக்கு சுதந்திரம் அளித்து வெளியேறியது.

**ஆனால் இன்று நடப்பது என்ன?**

1991ல் இந்திய ஒன்றியத்தில் உலக மயமாக்கல் வந்தது முதல் இந்தியாவில் எல்லா மொழி தேசிய இனங்களிலும் காடு, கனிம வளங்கள் சுரண்டப்படுகின்றன. இலஞ்சமும், ஊழலும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் தலைவிரித்தாடுகின்றன. பன்னாட்டு கம்பெனிகளின் மண் பறிப்பு வேட்டைக் நாடாக இந்திய ஒன்றியம் மாறிவிட்டது. அன்று ஒரு கிழக்கிந்திய கம்பெனி இருந்த இடத்தில் இன்று பல பன்னாட்டு கம்பெனிகள் உள்ளன.

16-06-1801 மருதுபாண்டியர்கள் அறிக்கை. ஜம்புதீபகற்ப ஜம்பு தீவுபிரகடனம் என்னும் ஸ்ரீரங்கத்து பிரகடனம்.

ஜம்பு தீபகற்பத்தில் வாழும் அனைத்து சமூகத்தினர், முசல்மான்கள் முதலான எல்லோருக்கும் தெரியப்படுத்தும் அறிவிப்பு என்னவென்றால், மேன்மை தாங்கிய நவாபு முகமது அலி, ஐரோப்பியர்களுக்கு, நம்மிடையே இடங்கொடுத்து விட்டார். ஐரோப்பியர்கள் தங்கள் வாக்குறுதிகளை மீறி அவருடைய அரசாங்கத்தையே தங்களுடையதாக ஆக்கிக்கொண்டு, நாட்டு மக்கள் எல்லாரையும் நாய்களாகக் கருதி ஆட்சி அதிகாரம் செய்து வருகிறார்கள். உங்களிடையே ஒற்றுமை, நட்பு, இல்லாத காரணத்தினால், ஐரோப்பியரின் சூழ்ச்சியைப் புரிந்து கொள்ள இயலாமல், உங்களுக்குள் ஒருவரையொருவர் பழிதூற்றிக் கொண்டது மட்டுமின்றி, நாட்டையும் அன்னியரிடம் ஒப்படைத்து விட்டீர்கள். மக்கள் பெரிதும் ஏழ்மையில் உழல்கிறார்கள். சோற்றுக்குப் பதில் நீராகாரம்தான் உணவு என்று ஆகிவிட்டது. ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதாக இருந்தாலும் மனிதன் கடைசியில் செத்துத்தான் ஆகவேண்டும். ஆதலால், பாளையங்களில் உள்ள ஒவ்வொருவரும் போர்க்கோலம் பூண்டு ஒன்றுபட வேண்டும். ஐரோப்பியர்களின் பெயர்கள் இந்தநாட்டில் மிஞ்சியிருக்காமல் செய்ய வேண்டும். அப்போது தான் ஏழைகளும் இல்லாக்கொடுமையால் அல்லல்படுவோரும் வாழ முடியும். அதே நேரத்தில், இவர்களுக்கு தொண்டூழியம் செய்து நாயைப்போல சுகவாழ்வு வாழ விரும்புகிறவன் எவனாவது இருந்தால், அத்தகைய பிறவிகளை ஒழித்துக்கட்ட வேண்டும். ஆதலால், ராணுவம் அல்லது மற்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கும் நீங்கள் எல்லோரும் அந்நியன் கீழ்த்தொண்டுபுரியும் சுபேதார், அவில்த்தார், நாயக்கர், சிப்பாய்கள் மற்றும் போர்க் கருவிகளைப் பயன்படுத்தும் எல்லோரும், உங்களுக்கு வீரமிருந்தால் அதைக் கீழ்க்கண்டவாறு நீங்கள் வெளிப்படுத்தவேண்டும். ஐரோப்பியர்களை எந்த இடத்தில் கண்டாலும், கண்ட இடத்தில், அவர்களை அழித்துவிட வேண்டும் அவர்களுக்கு எவனொருவன் தொண்டூழியம் செய்கிறானோ, அவனுக்கு இறந்தபின் மோட்சம் கிடையாது என்பதை நான் உறுதியாகக் கூறுவேன். இதைப் படிப்பவர்களோ கேட்பவர்களோ இதில் கூறியிருப்பதைப் பரப்புங்கள். எவனொருவன் இந்த அறிவிப்பை ஒட்டப்பட்ட சுவரிலிருந்து எடுக்கிறானோ அவன் பஞ்சமாபாதகங்களைச் செய்தவனாகக் கருதப்படுவான். இப்படிக்கு மருது பாண்டியன் பேரரசர்களின் ஊழியன், ஐரோப்பியர்களின் ஜென்ம விரோதி என பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

**தொகுப்பு: வி.பொன்வாசிநாதன், புதுக்கோட்டை.செல்: 9842037480**

# தொண்டர்கள் அமைதி காக்கவும்





# ஆம்னி பஸ் டயர் வெடித்து விபத்து: 3 பேர் பலி

# புகாரை விசாரிக்க சென்ற தலையாரி கார் மோதி பலி



சென்னை / புதுக்கோட்டை | 16.06.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

16.06.2022 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கருமுத்து தியாகராஜன் செட்டியார் , தமிழகத் தொழிலதிபர் (பி.1893) (இ.1974)



டி. ஆர். மகாலிங்கம் , தென்னிந்தியத் திரைப்பட நடிகர், பாடகர், தயாரிப்பாளர், இசையமைப்பாளர் (பி.1924) (இ.1978)



என். சந்தோஷ் எக்டே , இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி (பி.1940)



## இன்றைய நினைவு நாள்

சித்தரஞ்சன் தாஸ் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1870) (இ.1925)



சார்லஸ் கோர்ரியா , இந்தியக் கட்டிடக்கலைஞர் (பி.1930) (இ.2015)



எல்முட் கோல் , செருமனியின் 6வது அரசுத்தலைவர் (பி.1930) (இ.2017)



வெள்ளையர் கிழக்கிந்திய கம்பெனி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக
மருது பாண்டியர்கள் வெளியிட்ட ஜம்பு தீபகற்ப பிரகடனம் 16-06-1801 இன்று